[2020 பிப்ரவரி 19

(ஆ) உலமாக்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை உயர்த்துதல், சென்னையில் ஹஜ் இல்லம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய இரு சக்கர வாகனங்கள் வாங்க உலமாக்களுக்கு மானியம் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பாகப் பின்வரும் அறிவிப்புகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்:*

1) தமிழ்நாட்டில் உள்ள வக்ஃபு நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வுபெற்று, வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகிய உலமாக்களுக்கு தற்போது ரூ.1,500/– வழங்கப்பட்டு வருகிறது. உலமாக்களுக்கு வழங்கப்படும் இந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.1,500/–லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2) ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு ஹஜ் குழுவின்மூலம் 4,000 பயணிகள் சென்னை விமான நிலையம் வழியாக ஹஜ் பயணம் மேற்கொள்கின்றனர். கடந்த ஆண்டு ஹஜ் பயணத்தின்போது 4,300–க்கும் மேற்பட்டோர் ஹஜ் பயணம் மேற்கொண்டனர். ஹஜ் பயணிகள் தங்களுடைய பயணத்திற்கு முன்பு தங்கி, கடவுச்சீட்டு, பயண உடைமைகள் சமர்ப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளைச் சிரமமின்றி மேற்கொள்ள தமிழ்நாடு வக்ஃபு வாரியம் சென்னையில் ஒதுக்கீடு செய்யும் நிலத்தில் ஒரு ஹஜ் இல்லம் கட்ட 15 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்து, புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3) தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 2,814 வக்ஃபு நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டில் உள்ளன. இந்தப் பதிவு செய்யப்பட்ட வக்ஃபு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்குப் புதிய இரு சக்கர வாகனங்கள் வாங்க ரூ.25,000/– அல்லது வாகனத்தின் விலையில் 50 சதவீதம், இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)